

திண்டுக்கல் மாவட்டம் ஆத்தூர் சட்டமன்றத் தொகுதி தி.மு.க. உறுப்பினரும், தி.மு.க. மாநில துணைப்பொதுச்செயலாளரும், ஊரக வளர்ச்சித்துறை அமைச்சருமான ஐ.பெரியசாமி, ஆத்தூர் தொகுதி பொது மக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களைப் பெற்று தீர்வு வழங்கினார். உடன் வந்தவாசி எம்.எல்.ஏ. அம்பேத்குமார், தலைமைச்செயற்குழு உறுப்பினர் தண்டபாணி, கிழக்கு மாவட்ட தி.மு.க. பொருளாளர் கு.சத்தியமூர்த்தி உட்பட பலர் உள்ளனர்.



நெல்லை மாவட்டம், அம்பாசமுத்திரம் வட்டம், அயன் சிங்கம்பட்டி கிராமத்தில் மின்சாரம் தாக்கி உயிரிழந்தவர்களின் 2 குடும்பத்தினருக்கு தலா ரூபாய் 1 லட்சம் வீதம் முதலமைச்சர் அவர்கள் அறிவித்த முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து ரூபாய் 2 லட்சத்திற்கான காசோலையை சட்டப்பேரவைத் தலைவர் மு.அப்பாவு வழங்கினார். உடன் அம்பை நகரச் செயலாளர் பிரபாகர பாண்டியன், மாவட்ட ஊராட்சி உறுப்பினர் சாலமோன் டேவிட், கல்லிடைக்குறிச்சி பேரூராட்சி துணை தலைவர் இசக்கி பாண்டியன் உள்பட பலர் உள்ளனர்.

### ஊதிய உயர்வு நிலுவைத் தொகை - போனஸ் - அகவிலைப்படி உயர்வு வழங்கிய

# முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு மின் கழக தொ.மு.ச. நன்றி!

## சங்கப் பொதுச் செயலாளர் பா.மணிமாறன் அறிக்கை!



சென்னை, நவ. 1-

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா பரிசாக ஊதிய உயர்வு நிலுவைத் தொகை, போனஸ், அகவிலைப்படி உயர்வு தமிழ்நாடு மின்வாரியத் தொழிலாளர்களுக்கு வழங்கிய தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு

நன்றி தெரிவித்து தமிழ்நாடு மின்கழகத் தொமுச பொதுச் செயலாளர் பா. மணிமாறன் அறிக்கை வெளியிட்டுள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு:-

தமிழ்நாடு மின்சார வாரியத்தில் பணிபுரியும் தொழிலாளர்கள், பொறியாளர்கள் மற்றும் அலுவலர்களுக்கு ஏராளமான சலுகைகள் வழங்கி அவர்களின் வாழ்வாதாரம் உயர்த்திய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை போற்றும் விதமாக, 01.12.2019 முதல் புதிய ஊதிய உயர்வு, கருணைத் தொகையுடன் கூடிய 20 சதவிகிதம் போனஸ், 4 சதவிகிதம் அகவிலைப்படி உயர்வு வழங்கிய தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம்.

**ஊதிய உயர்வின் சிறப்புகள்**

6 சதவிகிதம் ஊதிய உயர்வு, 12/2019 முதல் 03/2022 வரை 28 மாதங்களுக்கு ரூ.500/-, ஊதிய உயர்வு நிலுவைத்தொகை 01.04.2022 முதல் 31.05.2023 வரை, பத்து வருடங்கள் பணி முடித்தவர்களுக்கு சர்வீஸ் வெயிட்டேஜ் 3 சதவிகிதம் என அனைவரும் மனம் மகிழும் வண்ணம் ஜூன் மாதம் வழங்கினார்.

தற்போது முதல் தவணையாக ஊதிய உயர்வு நிலுவைத் தொகையும், மின்வாரியத் தொழிலாளர்கள், பொறியாளர்கள் மற்றும் அலுவலர்களுக்கு வழங்கிய தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றியினை தெரிவித்துக் கொள்கின்றோம்.

கருணைத்தொகையுடன்போனஸ் மின்வாரியத் தொழிலாளர்களுக்கு கருணைத் தொகையுடன் போனஸ் 20 சதவிகிதம் என அதிகப்பட்சமாக ரூ. 16,800/ வழங்கியவர், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். பிறகு வந்த அ.தி.மு.க. ஆட்சியில் இது 10 சதவிகிதமாக குறைத்து வழங்கினார்கள். அதை மீண்டும் 20 சதவிகிதமாக உயர்த்தி, தொழிலாளர்கள் மனம் மகிழும் வண்ணம் உத்தரவு வழங்கியுள்ள முதலமைச்சர் அவர்களுக்கு நன்றியினை தெரிவித்துக் கொள்கின்றோம்.

**அகவிலைப்படி உயர்வு**

முதலமைச்சர் அவர்கள் பொறுப்பு ஏற்றவுடன் மின்வாரியத்தில் பணிபுரிகிறவர்களுக்கு அகவிலைப்படி உயர்வை உடனுக்குடன் வழங்கி வருகிறார்கள்.

01.07.2023 முதல் 4 சதவிகிதம் முன்தேதியிட்டு அகவிலைப்படி உயர்வை 42 சதவிகிதத்திலிருந்து 46 சதவிகிதமாக உயர்த்தி வழங்கியுள்ளார்கள்.

இதனால் மின்வாரி யத்தில் பணிபுரியும் தொழிலாளர்கள், பொறியாளர்கள் மற்றும் அலுவலர்கள் என சுமார் 85,000 பணியாளர்களும், மின்வாரியத்தில் பணிபுரிந்து ஓய்வு பெற்றவர்களும் என சுமார் 1,00,000க்கு மேற்பட்டவர்களும் பயன் பெறுவார்கள்.

தமிழ்நாடு மின்சார வாரியத்தின் கடும் நிதி சுமையிலும், தமிழ்நாடு மின்சார வாரியத்தில் பணி புரியும் தொழிலாளர்கள், பொறியாளர்கள் மற்றும் அலுவலர்களுக்கு ஊதிய உயர்வு நிலுவைத்தொகை, கருணைத்தொகையுடன் போனஸ் 20 சதவிகிதம் மற்றும் 4 சதவிகிதம் அகவிலைப்படி உயர்வை, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா பரிசாக வழங்கிய தொழிலாளர்களின் நலன் பாதுகாக்கும், மக்கள் நலன் பாதுகாக்கும், திராவிட மாடல் அரசின் முதலமைச்சர் அவர்களுக்கு எங்களது வாழ்நாள் நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இவ்வாறு பா.மணிமாறன் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### வாக்காளர் பட்டியல் சரிபார்ப்பு!

# திருவண்ணாமலை மாவட்டக் கழகத்தினர் தீவிரமாக ஈடுபடுவீர்!

## கழகத்தினருக்கு அமைச்சர் எ.வ.வேலு வேண்டுகோள்!



திருவண்ணாமலை, நவ.1-

வாக்காளர் பட்டியல் சரிபார்க்கும் பணியில் திருவண்ணாமலை மாவட்ட கழகத்தினர் தங்களை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டு விடுபட்ட மற்றும் புதிய வாக்காளர்களை சேர்த்திட வேண்டுமென பொதுப்பணித்துறை அமைச்சரும், கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினருமான எ.வ.வேலு அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் விடுத்துள்ள அறிக்கையில்..

01.01.2024 தேதியை தகுதியேற்படுத்தும் நாளாக கொண்டு வாக்காளர் பட்டியல் திருத்தம் செய்திட வரைவு வாக்காளர் பட்டியலை தேர்தல் ஆணையம் 27.10.2023 அன்று வெளியிட்டுள்ளது. 27.10.2023 முதல் 09.12.2023 வரை புதிய வாக்காளர்களை சேர்க்கவும் மற்றும் பெயர்கள் நீக்கவும், திருத்தம் செய்யவும் மனு செய்ய கால அவகாசம் கொடுக்கப்பட்டுள்ளது.

இது தவிர 04.11.2023 (சனிக்கிழமை), 05.11.2023 (ஞாயிற்றுக்கிழமை), 18.11.2023 (சனிக்கிழமை), 19.11.2023 (ஞாயிற்றுக் கிழமை) ஆகிய நான்கு நாட்களில் நிர்ணயிக்கப்பட்ட மையங்களில் சிறப்பு முகாம்கள் நடைபெற உள்ளன.

இந்நாட்களில் விடுபட்ட வாக்காளர்களும், இடம் மாறிய வாக்காளர்களும் 01.01.2024 அன்று 18 வயது நிரம்பக்கூடிய புதிய வாக்காளர்களும் தங்கள் பெயர்களை சேர்க்க, நீக்க, திருத்தங்கள் மேற்கொள்வதற்கான படிவங்களை பெற்று பூர்த்தி செய்து அந்த படிவங்களை அந்தந்த முகாம்களில் கொடுக்க வேண்டும்.

17வயது நிரம்பிய வர்களும், உரிய ஆவணங்களோடு விண்ணப்பிக்கலாம். அவர்கள் 18வயது நிரம்பும்போது வாக்காளர் பட்டியலில் இடம்பெற இந்திய தேர்தல் ஆணையம் ஏற்பாடு செய்திருக்கிறது.

இதன் அடிப்படையில் 2024 ஆம் ஆண்டு ஜனவரி 1ஆம் தேதி 18 வயது நிறைந்தவர்களின் பெயர்களையும் வாக்காளர் பட்டியலில் இதுவரை இடம் பெறாத பெயர்களையும் புதிதாக குடிபெயர்ந்து உள்ள வாக்காளர்களின் பெயர்களையும் வாக்காளர் பட்டியலில் சேர்க்கவும். தொகுதியிலிருந்து இடம் பெயர்ந்தவர்கள் மற்றும் இறந்தவர்கள் பெயர்களை தற்போதுள்ள பட்டியலில் இருந்து நீக்கவும் தேர்தல் ஆணையம் அறிவித்துள்ள மேற்கண்ட அட்டவணையின்படி சிறப்பு முகாம்கள் நடைபெறவிருக்கும் நாட்களில், நமது மாவட்டத்தில் உள்ள திருவண்ணாமலை, கீழ் பென்னாத்தூர், செங்கம் கலசப்பாக்கம், போளூர், ஆரணி, செய்யாறு, வந்தவாசி தொகுதிக்குட்பட்ட ஒன்றிய, நகர, பேரூர், கிளை, வார்டு கழக செயலாளர் நிர்வாகிகள் மற்றும் வாக்குச்சாவடி நிலை முகவர்கள் (BLA-2) ஆகியோர் தங்களை முழுமையாக ஈடுபடுத்திட கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் எ.வ.வேலு அறிக்கையில் கூறியுள்ளார்.

### திருச்செந்தூர் கோவில் அறங்காவலர் குழுத் தலைவர்

# ஆர்.அருள்முருகன் தாயார் ஆர்.விஜயலட்சுமி மறைவு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, நவ. 1 –

திருச்செந்தூர் கோவில் அறங்காவலர் குழுத் தலைவர் ஆர்.அருள் முருகன் தாயார் ஆர்.விஜயலட்சுமி மறைவு செய்தி அறிந்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தமது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துள்ளார்.

“கழகத் தலைவரும் முதலமைச்சருமான மு.க. ஸ்டாலின் அவர்களின் இரங்கல் செய்தி வருமாறு :

திருச்செந்தூர் கோவில் அறங்காவலர் குழுத் தலைவர் ஆர்.அருள்முருகன் அவர்களுடைய தாயார் ஆர்.விஜயலட்சுமி அவர்கள் மறைவெய்தினார் என்ற துயரச் செய்தி கேட்டு வருந்தினேன்.

அவரது குடும்பத்தி னர்க்கும் உறவினர்களுக்கும் ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தமது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

### இராமநாதபுரம் ஒன்றிய, நகர, பேரூர்க் கழக

# இளைஞர் அணி நிர்வாகிகளுக்கான நேர்காணல்!

## மாவட்டச் செயலாளர் காதர்பாட்சா முத்துராமலிங்கம் எம்.எல்.ஏ. அறிவிப்பு!



இராமநாதபுரம், நவ.1-

இராமநாதபுரம் மாவட்டச் செயலாளர் காதர்பாட்சா முத்துராமலிங்கம் அறிக்கை வருமாறு:-

கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, கழக இளைஞரணி செயலாளர், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின்படி கழக இளைஞரணி துணைச் செயலாளர்கள் முன்னிலையில் இராமநாதபுரம் மாவட்டத்திற்குட்பட்ட ஒன்றிய, நகர, பேரூர் அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர்கள் பொறுப்புகளுக்கு விண்ணப்பித்தவர்களுக்கான நேர்காணல் இன்று (01.11.2023 - புதன்கிழமை) மதியம் 2.00 மணி அளவில் இராமநாதபுரம் பாரதிநகர் வைஸ்ராய் மஹாலில் நடைபெற உள்ளது. இந்த நேர்காணலில் ஒன்றிய, நகர,பேரூர் அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர்கள் பொறுப்புகளுக்கு விண்ணப்பித்தவர்கள் அனைவரும் தங்களுடைய வயதை நிருபிப்பதற்கான கல்விச் சான்றிதழ், ஆதார் அட்டை, கழக உறுப்பினர் அட்டை, இளைஞர் அணி போன்ற கழக அமைப்புகளில் ஏற்கெனவே பணியாற்றியிருந்தால், அதுதொடர்பான உரிய ஆவணங்களுடன் தவறாமல் இளைஞரணி நேர்கானாவில் கலந்துகொள்ள உரிய ஏற்பாடுகளை ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள் செய்திடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

# சென்னையில் தயாராகும் நவீன ரயில் பெட்டி!

சென்னை, நவ. 1-

பயணிகள் ரெயில் தயாரிப்பில் புதியதொரு சாதனையை சென்னையில் உள்ள ஐசிஎப் ரெயில் பெட்டி தொழிற்சாலை நிகழ்த்தியுள்ளது. இங்கு இந்தியாவிலேயே முதல் முறையாக ‘புஷ் புல் ரேக்’ எனப்படும் நவீன வசதி கொண்ட புதிய ரெயில் பெட்டிகள் தயாரிக்கப்படுகின்றன.

இந்த ரெயில் பெட்டிகளின் இரு முனைகளிலும் என்ஜின்கள் இடம்பெற்று இருக்கும். 2 என்ஜின்கள் இருப்பதால் இந்த ரெயிலை முன்னும் பின்னும் நகர்த்த முடியும். இந்த ரெயில் குளிர்சாதன வசதி இல்லாத 22 பெட்டிகளை கொண்டிருக்கும்.

இதில் 3 அடுக்கும் தூங்கும் வசதி கொண்ட 12 பெட்டிகளும், 2ம் வகுப்பு இருக்கை வசதி கொண்ட பெட்டிகளும் உள்ளன. இந்த ரெயில் பெட்டிகள் குலுங்காமல் செல்லும் என்பதால் பயணிகளுக்கு வசதியாக அமையும் என ரெயில்வே துறை தெரிவித்துள்ளது.




கழக இளைஞரணி செயலாளர் – அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அறிவிப்புக்கு இணங்க மதுரை மாநகர் மதுரை வடக்கு, தெற்கு மாவட்டங்களில் ஒன்றிய, நகர, பேரூர் கழகங்களுக்கான இளைஞர் அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்களுக்கான நேர்காணல், மதுரை வடக்கு மாவட்ட செயலாளர் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி மதுரை தெற்கு மாவட்டச் செயலாளர் சேடப்பட்டி மு. மணிமாறன், இளைஞர் அணி மாநில துணைச் செயலாளர் ஜோயல், ஜிபி ராஜா, இன்பா ரகு,பிரகாஷ்,பிரபு கஜேந்திரன்,இளைய ராஜா,அப்துல் மாலிக், சீனிவாசன் ஆகியோர் முன்னிலையில் துவக்கி வைத்து சிறப்புரை ஆற்றிய போது எடுத்த படம். உடன் மாநகர மாவட்ட அமைப்பாளர் சௌந்தரராஜன், தெற்கு மாவட்ட அமைப்பாளர் விமல் மற்றும் நேர்காணலில் கலந்து கொண்ட இளைஞர் அணியினர் உள்ளனர்.

### திருச்சி தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில்

# முத்தமிழ் கலைஞர் பிறந்த நாள் விழா நிகழ்ச்சிகள் 100 நவம்பர் 2023 மாத நிகழ்வுகள் 10

## அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அறிவிப்பு!



| வ.எண் | நிகழ்ச்சிகள் | நிகழ்ச்சி ஏற்பாடு | தலைமை | சிறப்பு அழைப்பாளர்கள் |
|---|---|---|---|---|
| 1. 02/11/23 09.00AM | தலைவர் கலைஞர் எழுதிய “சேரன் செங்குட்டுவன்” நாடகம் மீண்டும் அரங்கேற்றம் | மாவட்ட, மாநகர நிர்வாகிகள் | இரா.மூக்கன், லீலா வேலு, பொன்செல்லையா, வி.சரோஜினி | அன்பகம் கலை கழக இணை அமைப்பு செயலாளர் |
| 2. 03/11/23 09.00AM | சட்ட கல்லூரியில் மாணவர்களுக்கான பேச்சுப்போட்டி தலைப்பு : மாநில சுயாட்சி, அரசியல் சட்ட மாண்புகளை காப்போம் | மாவட்ட, மாநகர வழக்கறிஞர் அணி | கே.ஏ.வி.தினகரன் மாவட்ட அமைப்பாளர் எம்.பன்னீர்செல்வன் மாநகர அமைப்பாளர் | என்.ஆர்.இளங்கோ.M.A.B.L., M.P மாநில அணி செயலாளர் |
| 3. 04/11/23 06.00PM | தலைவர் கலைஞருக்கு புகழ் சேர்க்கும் தெருமுனை பிரச்சாரம் | வார்டு எண் - 39,39A திருவெறும்பூர் பகுதி | ஐ.செல்வராஜ் வினோத் கனகராஜ் | தமிழ்.க.அமுதரசன் தலைமை கழக பேச்சாளர் |
| 4. 05/11/23 06.00PM | தலைவர் கலைஞருக்கு புகழ் சேர்க்கும் தெருமுனை பிரச்சாரம் | வார்டு எண் -12,12A மலைக்கோட்டை பகுதி | ஜெ.சிவகுமார் பி.ஜெயச்சந்திரன் | தமிழ். சாதிக் தலைமை கழக பேச்சாளர் |
| 5. 18/11/23 08.00AM | மாவட்ட கழகம் சார்பில் திருச்சி கிழக்கு தொகுதியில் கழக கொடியேற்றுதல், மற்றும் தலைவர் கலைஞர் புகழ் பரப்பும் வகையில் அணிகளுக்கு கருத்துரை வழங்கும் விழா | திருச்சி தெற்கு மாவட்ட கழகம் | மாவட்ட கழக செயலாளர் | மாண்புமிகு க. துரை முருகன் கழக பொதுச்செயலாளர் 23 கழக சார்பு அணிகளுக்கு கருத்துரை வழங்குதல் (மாவட்டம் / மாநகரம்) |
| 6. 19/11/23 09.00AM | தலைவர் கலைஞர் புகழ் பரப்பும் திரைப்பட கலைஞர்கள் பங்கேற்கும் கருத்தரங்கம் | மாவட்ட, மாநகர தொண்டர் அணி | என்.ஏ.உதயகுமார் மாவட்ட அமைப்பாளர் ஆ.தினகரன் மாநகர அமைப்பாளர் | பெ.சேகர் மாநில அணி செயலாளர் கருத்தரங்கம் திரைப்பட நடிகர். தம்பி ராமையா |
| 7. 19/11/23 06.00PM | தலைவர் கலைஞர் புகழ் பரப்பும் பொதுக்கூட்டம் | வையம்பட்டி தெற்கு ஒன்றியம் | வி.ஏ.ராஜேந்திரன் ஒன்றிய செயலாளர் | மாண்புமிகு.மா.சுப்பிரமணியன் சென்னை தெற்கு மாவட்ட கழக செயலாளர் தமிழ்நாடு சுகாதாரத்துறை அமைச்சர் |
| 8. 26/11/23 07.00AM | திருவெறும்பூர் வடக்கு ஒன்றியம் 11 ஊராட்சிகளில் தலைவர் கலைஞர் நூற்றாண்டு விழா கல்வெட்டு திறப்பு மற்றும் கொடியேற்று விழா | திருவெறும்பூர் வடக்கு ஒன்றியம் | கே.எஸ்.எம்.கருணாநிதி ஒன்றிய செயலாளர் | மாவட்ட கழக செயலாளர் |
| 9. 26/11/23 06.00PM | தலைவர் கலைஞர் புகழ் பரப்பும் பொதுக்கூட்டம் | கலைஞர் நகர் பகுதி கழகம் | ஜி.மணிவேல் பகுதி செயலாளர் | மாண்புமிகு.எ.வ.வேலு திருவண்ணாமலை தெற்கு மாவட்டகழக செயலாளர் தமிழ்நாடு பொதுப்பணித்துறை அமைச்சர் |
| 10. 28/11/23 06.00PM | தலைவர் கலைஞருக்கு புகழ் சேர்க்கும் தெருமுனை பிரச்சாரம் | வார்டு எண் - 17,17A மார்க்கெட் பகுதி | எஸ்.மனோகரன் ஆர்.எம்.சுப்ரமணியன் | மண்ணை.இளங்கோ தலைமை கழக பேச்சாளர் |

**அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி**
செயலாளர்
திருச்சி தெற்கு மாவட்ட தி.மு.க.